மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றே இதுபற்றி தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவரே நேற்று பேச முடியவில்லை. திடீர் என்று என்னைக் கேள்வி கேட்பதில் என்ன அர்த்தம். நேற்று அவர் பேச முடிந்ததா ? அவர் இளைஞர். அவராலேயே நேற்று இங்கே முடியவில்லையே. இந்தப் பகுதியைக் கலவரப் பகுதி என்று ஒன்றும் அறிவிக்கப்படவில்லை.

(ஆ) முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்சினை

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே கட்டளை மேட்டு வாய்க்கால், தென்கரை வாய்க்கால் இவைகளில் தண்ணீர் வரவில்லை. தண்ணீர் நிறுத்தப்பட்ட காரணத்தால் 2 இலட்சம் ஏக்கர் காய்ந்து போய்விட்டது. அது சம்பந்தமாக..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு ஒத்திவைப்பு தீர்மானமாக கொண்டு வாருங்கள். எதுவுமே கொடுக்காமல் திடீர் என்று கேட்டால் எப்படி? ஒரே நாளில் அவைகள் காய்ந்து இருக்காது. ரொம்பநாள் தண்ணீர் வராமல் போனதால் தான் காய்ந்து இருக்கும். நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாக கொண்டு வாருங்கள். எடுத்துக்கொள்ள முயற்சி செய்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-2-1983 அன்று நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். கும்பகோணம் சோமேஸ்வரர் ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு மெய்க்காவலர் கொலை செய்யப்பட்டார் என்பது குறித்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராசமாணிக்கம் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அதை இன்று எடுத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் அது வேண்டாம் என்றால் விட்டுவிடுகிறேன். ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தான் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பார்வையாளர்கள் மாடம் தொடர்ச்சி

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையாளர் காலரி பற்றி பதில் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் பார்வையாளர் காலரியில் பார்வை

1983 பிப்ரவரி 10]

யாளர்களை அனுமதிக்கவில்லை. அதிலே கூட நாங்கள் ஒரு முக்கியமான உரிமைப் பிரச்சினையை எழுப்பலாம் காரணம் அந்த காலரியில் சி.ஐ.டி. அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த உடையில் வராமல்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆபீஸர்கள் காலரியில் ஆபீஸர்கள் தான் இருக்கிறார்கள். சி.ஐ.டி. கள் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. அது என் கவனத்திற்கு வந்தால் கவனிக்கிறேன். அபிசியல் காலரியில் அனுமதிக்கப்பட்டவர்கள்தான் இருக்கிறார்கள். இன்று என்ன சூழ்நிலை ஏற்படும் என்று தெரியவில்லை. அதனால் தான் பார்வையாளர்களை இன்று அனுமதிக்கவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருப்பவர்கள் சி. ஐ. டி. ஆபீஸர்கள்தான், அதற்கு நான் பொறுப்பு ஏற்கிறேன். சி. ஐ. டி. ஆபீஸர்களை அவையில் அனுமதிப்பது அவையின் உரிமையை மீறிய செயலாகும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் விசாரித்து சொல்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்ன பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. அதை உடனடியாக...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்கள் தான் அதை சொல்லிவிட்டாரே. அவர் தமிழில் சொன்னார். அதை நீங்கள் ஆங்கிலத்தில் சொல்லப்போகிறீர்களா ?

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.ஐ.டி. கள் அவையில் இருக்கக்கூடாது. இருந்தால் அவர்களை வேளியேற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் விசாரித்து சொல்கிறேன். நீங்கள் கொடுக்கும் உத்திரவுகளை உடனே நிறைவேற்றிவிட முடியாது. நீங்கள் நேற்று முதற் கொண்டு உத்திரவு போட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். நான் நிறைவேற்றும் இடத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். நான் விசாரிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையாளர்கள் காலரியில் சி. ஐ. டி. கண்காணிப்பு எப்படி நியாயம்? இங்கே உறுப்பினர்களுக்கு என்ன பாதுகாப்பு ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் விசாரித்துச் சொல்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் கட்டளை வாய்க்காலிலிருந்து தண்ணீர் வரவில்லை, அதனால் 2 லட்சம் ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஒவ்வொரு கட்சிக்கு ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் என்று எடுத்துக் கொண்டு வருகிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் இல்லாத நாள் இருந்தால் சொல்லுங்கள் அவரவர்கள் அவர்களுடைய பிரச்சினையை முக்கியம் என்று சொல்கிறீர்கள். அவைகளை நான் மறுக்கவில்லை. (குறுக்கீடு) எனக்கு இன்னும் அவ்வளவு அறிவு, ஆற்றல் வரவில்லை. தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். திரு. ராஜமாணிக்கம் அவர்கள் 3 நாட்களாக என்னை வற்புறுத்திக் கொண்டு இருக்கிறார். அதை நான் இன்று எடுத்துக் கொள்ள இருக்கிறேன். நான் எடுக்காமல் இருந்தால் சொல்லுங்கள். நான் எதிர்கட்சிக்கு மதிப்பு கொடுக்காமல் இருந்தால் சொல்லுங்கள். தவறு என்றால் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

4 ஒத்திவைப்புத் தீர்மானம்

விவசாயிகளிடமிருந்து கடனை வசூலிக்க வருவாய் நீதி மன்றம் மூலம் நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், கே. எம். தங்கமணி, இல. பலராமன், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, செ. இராமலிங்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், என். பழனிவேல், ரா. கிருஷ்ணன், மு. அம்பிகாபதி ஆகியோர் ''தமிழகம் முழுவதும் வறட்சி நிலை இருந்தும் விவசாயிகள் கடனை வசூலிக்க ரெவின்யூ கோர்ட் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுவது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து திரு. இராசமாணிக்கம் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்